DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.6/2023**
**2025-ம் ஆண்டு ஜூன் திங்கள் 02- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | சக்திவேல் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | சின்னப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | கிணத்துக்கடவு, தேவராயபுரம் | வயது | - | 28/2025 |
| சாதி | - | | | | |

**<u>02-06-2025</u>**

**( 1-ம் எதிரி ஆஜர்)(2-ம் எதிரி ஆஜரில்லை)**

( 2-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.அ.சா.1 முத்துராஜ் எனது அப்பாவார். ஆஜர் 1-ம் எதிரியை தெரியும். 2-ம் எதிரியை தெரியாது. கடந்த 2022-ம் ஆண்டு 11-வது மாதம் தேதி நினைவில் இல்லை. ஒரு நாள் இறந்துபோன மணிகண்டனும், அவருடன் 2, 3 நபர்களும் வேலைக்கு செல்வதற்காக வால்பாறையில் சென்டிரிங் வேலைக்காக வந்திருந்தார். அப்போது அவருக்கு சம்பளம் பாக்கி இருந்ததால் நான் வேலை செய்துகொண்டிருந்த வால்பாறையில் உள்ள பவின் ஹோம் ஸ்டேக்கிற்கு வந்தார். அவர் குடிபோதையில் இருந்தார். பின்வழியாக வந்து மேஸ்திரியான ஆஜர் 1-ம் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார். அவருடன் பேசிவிட்டு 1-ம் எதிரி வெளியே சென்றுவிட்டார். அப்போது திடீரென்று மணிகண்டனுக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டார். அவர் விழந்த இடத்தை நான் கீழே சென்று பார்த்தேன். அவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள். பின்பு அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவதினத்தன்று எத்தனை மணிக்கு வேலைக்குசென்றேன் என்றால் காலை 08.00 மணிக்கு வேலைக்கு சென்றேன். என்னுடன் மொய்தீன், கிரிதரன், மணி ஆகியோர்கள் வேலை செய்தார்கள் என்றால் சரிதான். மணிகண்டன் சம்பவயிடத்திற்கு வரும்போது காலை சுமார் 11.30 மணி இருக்குமா என்றால், இருக்கும் சம்பவம் 12.00 மணி அளவில் நடந்தது. சம்பவதினத்தன்று மணிகண்டன் வேலைக்கு வரவில்லை என்றால் சரிதான். சம்பளபாக்கி வாங்கவந்தார் என்றால் சரிதான். மணிகண்டன் வேலை செய்யும் இடத்தில் ஈரத்தில் நின்றுயிருந்ததால் வலிப்பு வந்து கீழே விழுந்துவிட்டார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் இதைதான் சொன்னேன். ஆஜர் 1-ம் எதிரி தான் கான்ட்ரக்ட் எடுத்து வேலை செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் சராம் கட்டி வேலைசெய்யும் போது 1-ம் எதிரி பாதுகாப்பிற்காக மஞ்சள் நிற ஹெல்மெட் மற்றும் மஞ்சள் நிற கயிறு வாங்கிகொடுத்தார் என்றால் அதோடு பெல்டும் வாங்கிகொடுத்திருந்தார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.